**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S.150/2013**

**நாள்.11.03.2021**

**வா.சா.1 கருப்புதுரை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் மாணிக்கம்சேர்வை, ஏவுரிசேர்வை மகன் கருப்பண்ணசேர்வை ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. 21.03.1942 மற்றும் 09.03.1943 தேதிகளிட்ட கிரையபத்திரங்களின் படி மாணிக்கம்சேர்வை, ஏவுரிசேர்வை மகன் கருப்பண்ணசேர்வை ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. மேற்படி சொத்துக்கள் கிரையம் பெற்ற விபரம் அவர்களின் மூதாதையர்களின் கிரையம் பற்றிய விபரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. கருப்பண்ணசேர்வை மனைவி பெயர் கருப்பாயி என்றால் சரி. கருப்பண்ணசேர்வையும் அவரது மனைவி கருப்பாயி-க்கும் வாரிசுகள் மருதாயியம்மாள் என்றால் இல்லை. மேற்படி மருதாயியம்மாள் தான் கருப்பண்ணசேர்வையும் அவரது மனைவி கருப்பாயி-க்கும் பிறந்த வாரிசு என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. கருப்பாயி, கருப்பண்ணசேர்வை இறந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது, தற்போது மேற்படி நபர்கள் உயிருடன் இல்லை. கருப்பண்ணசேர்வை, கருப்பாயி அவர்களின் திருமணவிபரம், வாரிசுவிபரம் எனக்கு நேரடியாக தெரியாது. எனது தாத்தாவின் பெயர் பழனிச்சாமி. அவருடைய தந்தை பெயர் சுப்பிரமணி. சுப்பிரமணியன் கருப்பண்ணசேர்வையின் சகோதரர். நான் கருப்பண்ணசேர்வையின் சகோதரரின் பேரன் என்றால் சரி. கருப்பண்ணசேர்வைக்கு தாங்கள் நேரடி வாரிசு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் கருப்பண்ணசேர்வைக்கு நேரடி வாரிசு என்றால் இல்லை. கருப்பண்ணசேர்வையின் இறப்பை பதிவு செய்ய பிரதிவாதி நீதிமன்றத்தின் மூலம் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி நீதிமன்றத்தின் மூலம் பெற்ற உத்தரவின் அடிப்படையில் தான் கருப்பண்ணசேர்வையின் இறப்பை பிரதிவாதிகள் பதிவு செய்துள்ளார்கள் என்ற விபரம் தங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உண்மையை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஏவுரிசேர்வையின் மகன் கருப்பண்ணசேர்வை இறக்கும் போது பிரதிவாதி சிறுபிள்ளையாக

இருந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. கருப்பண்ணசேர்வையின் உடன்பிறந்த சகோதரரின் பேரன் என்று மோசடியாக பட்டா பெற்று கிரையப்பத்திரங்கள் உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

**s/d.Tmt.M.Muruganathi**
**Principal District Munsif**
**Vedasandur**